(இ) மணலி உரத் தொழிற்சாலையில் வேலை இழந்துள்ள கான்டிராக்ட் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டியது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலி சென்னை உரத் தொழிற்சாலையில் பணி யாற்றக்கூடிய கான்டிராக்ட் தொழிலாளர்கள் 2 ஆண்டுக்காலமாக வேலை மறுக்கப்பட்டு வீதியிலே இருக்கிறார்கள். இது பற்றிய பிரச்சினையை இந்த அவையிலே எழுப்பியிருக்கிறேன். மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலை யில் அவர்களுக்கு கான்டிராக்ட் சொசைட்டி அடிப்படையில் வேலை அளிக்க வேண்டும் என்ற ஒரு முடிவு ஏற்பட்டு அந்த முடிவு கூட அமல் செய்யப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரம் கூட கோரவில்லை ; கான்டிராக்ட் ஆக மீண்டும் வேலைக்கு எடுக்க வேண்டும் என்று கோருகிற போது, அதுவும் கூட மறுக்கப்பட்ட நிலையிலே குடும்பத்தோடு, வறுமையைச் சந்திக்க முடியாமல் அவர்கள் வீதிக்குத் தள்ளப்பட்டிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையிலே அந்தக் கம்பெனிக்கு முன்பாக மறியலிலே ஈடுபடுவதற்கு இன்றைக்குத் தள்ளப்பட்டிருக்கக் கூடிய நிலைமை எல்லாம் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக தொழிலாளர் துறை ஆணையர் முன்னிலை யிலே நடைபெற்ற பேச்சுவார்த்தை வேறு விதமாக திசை திருப்பப் பட்டு அந்தப் பிரச்சினை மீண்டும் தொடரப்படாமலேயே நின்று கொண்டிருக்கிறது. அரசு முடிவு எடுத்த பிறகும் கூட அந்த முடிவு அமலாக்கப்படாமல் இருக்கும் நிலைமையை மாற்றி அவர்களுக்கு மீண்டும் வேலை கிடைப்பதற்கு மாண்புமிகு தொழி லாளர் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி, அப்படிப் பட்ட ஒரு உறுதி மொழியை அவர்களிடத்திலேயிருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

10-40 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர் கள் மணலியிலே உள்ள உரத் தொழிற்சாலையில் இருக்கின்ற கான்டிராக்ட் தொழிலாளர்களை அழைத்துக் கொண்டு வந்து எனது அறையிலே பேசினார்கள். அப்படி பேசியபோது, அந்த கான்டிராக்ட் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது என்ற முடிவுக்கு வருவதற்கு முன்பு, நமது மின் வாரியத்திலே தொழிலாளர்களுக்கென்று ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து இருப்பது போல் அவர்களுக்கும் அமைக்கலாம் என்று ஒரு பரிந்துரை செய்யப்பட்டு ஆணையர் அவர்களிடம் அது அனுப் ப்பட்டது. ஆணையர் அவர்கள் விசாரித்து அவர்கள் என்ன

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முடிவு எடுத்து இருக்கிறார்கள் என்பது இதுவரை எனக்குத் தெரியவில்லை. ஆனால் உறுப்பினர் அவர்கள், இன்று காலை யிலேதான் இந்த அவையிலே வந்து சொன்ன காரணத்தால் மேற்கொண்டு ஆணையர் அவர்கள் எடுத்து இருக்கின்ற நட வடிக்கைகளைப் பற்றி எல்லாம் நாளை காலையிலே அறிவிக் கிறேன் என்பதையும் சொல்லி, இங்கே உறுப்பினர் அவர்கள் தொழிலாளர்களுக்கு ஒரு உறுதிமொழி வேண்டுமென்று, தொழி லாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கான உறுதி மொழியைத் தரவேண்டுமென்று இங்கே சொன்னார்கள். அப்படி உறுதி மொழி எங்களால் தர இயலாது. ஆனால் நிச்சயமாக தொழிலாளர் பக்கம் உதவியாக இந்த அரசு இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் ஏற்பட்ட மிகப் பெரிய கலவரம் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வேறு ஏதோ பேசப் போகிறீர்கள் என்று நினைத்தேன். இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. உங்கள் கட்சியிலே இருந்து கொடுத்து இருக்கிறார்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திண்டுக்கல் நகரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ரமணி, உ. ரா. வரதராசன், எஸ். டி. உகம்சந்த், எஸ். ஏ. தங்கராஜன் ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றும் எம். அப்துல் லத்தீப் ஆகியோர் ''திண்டுக்கல் நகரில் ஏற்பட்டுள்ள சட்டம் ஒழுங்கு நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட திண்டுக்கல் நகரத்தினுடைய வகுப்புக் கலவரம் குறித்து இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நாள் வலியுறுத்தி, மிகச் சுருக்கமான சில கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.